padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

27

## பண்டாரநாயக்காவின் வெற்றியும் தமிழரசுக் கட்சியின் மறியல் போரும்

1956 பொதுத்தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டது போல் S.W.R.D பண்டாரநாயக்கா தலைமையிலான மகாஜன எக்சத்பெரமுன அமோக வெற்றியீட்டியது. அதற்கு 95 இடங்களும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 8 இடங்களும் கிடைத்தன. லங்கா சமசமாஜக் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் 17 இடங்கள் கிடைத்தன. தமிழரசுக்கட்சி 10 இடங்களில் வெற்றியீட்டியது. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்தது. இந்தத் தேர்தலில் முதல் தடவையாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை தொகுதியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரான பொன். கந்தையா வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1956-ம் ஆண்டுக் காலகட்டத்தில் தென் பகுதியில் நிலவிய பௌத்த சிங்கள தேசியவாத அலையே ஐக்கிய தேசியக்கட்சியின் படுதோல்விக்கும் S.W.R.D. பண்டாரநாயக்காவின் 'மகாஜன எக்சத் பெரமுன'வின் அமோக வெற்றிக்கும் காரணமாக அமைந்தது.

> அவர்கள் (தமிழ் மக்கள்) தமக்கு அநியாயம் நடப்பதாக உணர்ந்தால் நாட்டிலிருந்து பிரிந்து போகத் தீர்மானிக்கலாம் என்று கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சி என்னதான் 'சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவோம்' என்று கூறினாலும், காலனிய, ஏகாதிபத்திய விசுவாசிகளாகவும் சார்பாளர்களாகவும் இருந்த அதன் தலைவர்களால் பௌத்த சிங்கள தேசியவாத எழுச்சிக்கு உரிய தலைமைத்துவத்தை கொடுக்க முடியவில்லை. ஆனால் S.W.R.D. பண்டாரநாயக்கா இந்த விடயத்தில் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டார்.

1953-ம் ஆண்டு நடைபெற்ற கடையடைப்பிலிருந்து அவர் நிறையப் பாடங்களைக் கற்றுக் கொண்டார். சிங்கள மக்களிடம் உருவாகி வந்த காலனிய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுகளையும் அதற்கு இடதுசாரிகள் தலைமை தாங்கியிருப்பதையும் அவர் கூர்ந்து கவனித்தார். மறுபுறத்தில் பௌத்த பிக்குகள் ஆயுர்வேத வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், மத்தியில் ஆங்கிலத்திற்கு எதிராக உருவாகிவந்த 'சிங்களம் மட்டும் மொழி' உணர்வையும் அவர் அவதானித்தார். இந்த இரண்டு போக்குகளையும் சரியான முறையில் இணைத்து பௌத்த சிங்கள தேசியவாதத்தை தூக்கிப் பிடிப்பதன் மூலம் சிங்கள மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றலாம் என அவர் திட்டமிட்டார்.

1953-ம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டு வரையில் ஆசிரியர்கள், விவசாயிகள், இளம் புத்த பிக்குகள், ஆயுர் வேத வைத்தியர்கள், மாணவர்கள் 'பஞ்ச மகா பல வேகயா' என்ற ஐந்துபிரிவினர்கள் மத்தியில் கடுமையாக வேலை செய்து அவர்களை தனது சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையச் செய்தார். 24 மணி நேரத்திற்குள் சிங்களத்தை ஆட்சி மொழியாக்கல், பௌத்த மதத்திற்கு முன்னுரிமை, பௌத்த சிங்களக் கலாச்சாரத்துக்கு புத்துயிரூட்டுதல் என்கின்ற அவரது கொள்கைகள் கிராமப்புற சிங்கள மக்களை கவரக்கூடியவையாக இருந்தன.



தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவி ஏற்ற பண்டாரநாயக்கா சிங்கள மக்களுக்கு வாக்குறுதியளித்தபடி தனது அரசாங்கத்தின் முதல் வேலையாக சிங்களம் மட்டும் சட்டத்துக்கான மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இம் மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்துக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது அரசாங்கத்தில் அங்கம் வகித்த பிலிப் குணவர்த்தனா.,

'எம் தேசியப் போராட்டத்தில் ஒரு முக்கியகட்டத்தை இம் மசோதா மூலம் நாங்கள் நிறைவேற்றுகின்றோம் இந்த நாட்டை அந்நிய சக்திகள் ஆக்கிரமிப்பதற்கு முன்னர் சிங்கள மொழி பெற்றிருந்த இடத்தை, நாம் மீண்டும் பெறுவது இத் தீவின் அபிவிருத்தி வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகும். (ஹன் சாட் 14 ஜூன் 1956) என்று கூறினார்.

இடதுசாரி அணியைச் சேர்ந்த லெஸ்லி குணவர்த்தனா தமிழ் மக்களை கட்டாயப்படுத்தி சிங்கள மொழியை ஏற்க வைப்பது மிகப்பெரிய இனக் கலவரத்துக்கும் பிரிவினைக்கும் வழி வகுக்கும் என்று கூறினார். இம் மசோதா தொடர்பாக விவாதத்தில் தனது கருத்தைத் தெரிவித்த அவர் 'இலங்கைக்கு மிகப் பெரிய ஆபத்து வர உள்ளது. அவர்கள் (தமிழ் மக்கள்) தமக்கு அநியாயம் நடப்பதாக உணர்ந்தால் நாட்டிலிருந்து பிரிந்து போகத் தீர்மானிக்கலாம்' என்று கூறினார்.

பிற்காலத்தில் இனவாதச் சேற்றுக்குள் விழுந்த கொல்வின் ஆர்.டி. சில்வா கூட இச் சிங்களம் மட்டும் சட்டத்தால்...

'இரத்தம் வடியும் துண்டிக்கப்பட்ட இரு சிறிய அரசுகள் ஒரு அரசிலிருந்து தோன்றக்கூடும்.. அண்மையில் வெளியேறிய ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் எம்மை ஏப்பம் விட இது ஏதுவாகக்கூடும்' (ஹன் சாட் 14 ஜூன் 1956) என்று கூறியதுடன் 'ஒரு மொழி இருநாடுகள் அல்லது இரண்டு மொழிகள் ஒரு நாடு. இதில் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள் எனக் கேட்டார் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பீட்டர் கெனமன். எஸ்.ஏ. விக்கிரமசிங்கா பொன் கந்தையா ஆகியோரும், லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் கொல்வின் ஆர்.டி.சில்வாவோடு என்.எம்.பெரேராவும் இம் மசோதாவை எதிர்த்து உரையாற்றினார்கள்.

> 'இரத்தம் வடியும் துண்டிக்கப்பட்ட இரு சிறிய அரசுகள் ஒரு அரசிலிருந்து தோன்றக்கூடும்.. அண்மையில் வெளியேறிய ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் எம்மை ஏப்பம் விட இது ஏதுவாகக்கூடும்' [ஹன் சாட் 14 ஜூன் 1956] என்று கூறியதுடன் 'ஒரு மொழி இருநாடுகள் அல்லது இரண்டு மொழிகள் ஒரு நாடு. இதில் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள் எனக் கேட்டார்

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் இந்தச் சிங்களம் மட்டும் சட்டம் வாக்களிப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 66 வாக்குக்களும் எதிராக 29 வாக்குகளும் விழுந்தன. ஆளும் மகாஜன எக்சத்பெரமுனவும், ஐக்கியதேசியக் கட்சியும் இம் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தன. லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ் கட்சியும், சமஷ்டிக் கட்சியும், (தமிழரசுக்கட்சி) எதிர்த்து வாக்களித்தன. அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சிலர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பொருளியல்துறை பேராசிரியரான எஸ்.ஆர்.ஜெகூரியா என்பவர், சிங்களம் மட்டும் சட்ட மசோதாவில் மாற்றம் எதுவும் செய்து தமிழர்களுக்கு சலுகை காட்டக்கூடாது என்று கோரி இம் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தினத்தன்று பாராளுமன்ற வளாகத்துக்குள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தார். இம் மசோதா எந்தவித மாற்றமுமின்றி கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்று பிரதமர் பண்டாரநாயக்கா நேரில் வந்து உறுதியளித்ததையடுத்து அவர் அவ் உண்ணாவிரதத்தை கைவிட்டார்.

இம் மசோதாவை நிறைவேற்றுவதற்கான காரணத்தை நியாயப்படுத்துவதற்கு—அதாவது மசோதாவில் ஒரு சிறு மாற்றமேனும் செய்வதை சிங்கள மக்கள் விரும்பமாட்டார்கள் என்பதை காட்டுவதற்கு பண்டாரநாயக்கா மேற்கொண்ட தந்திரபூர்வமான நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

இம் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சியினர் பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு முன் கூட்டியே அறிவித்துவிட்டு காலிமுகத்திடலில் உண்ணா நோன்பு ஒன்றை மேற்கொண்டனர்.

ஜூன் மாதம் 5-ம் திகதி அவர்கள் மேற்கொண்ட மறியர் போர் சிறீலங்கா பொலிசாரின் மேற்பார்வையில் சிங்களக் காடையர்களால் கலைக்கப்பட்டது. மறியல் போர் நடாத்திய பலர் காயங்களுக்கு உள்ளாகினர். சிலர் அருகிலிருந்த கால்வாய்க்குள் தூக்கிப் போடப்பட்டனர். இதைப் பிரதமர் பண்டாரநாயக்கா பாராளுமன்ற கட்டடத்தின் மேல் மாடியிலிருந்து யன்னல் கண்ணாடி வழியாக பார்த்துக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

> ஜூன் மாதம் 5—ம் திகதி அவர்கள் மேற்கொண்ட மறியர் போர் சிறீலங்கா பொலிசாரின் மேற்பார்வையில் சிங்களக் காடையர்களால் கலைக்கப்பட்டது. மறியல் போர் நடாத்திய பலர் காயங்களுக்கு உள்ளாகினர். சிலர் அருகிலிருந்த கால்வாய்க்குள் தூக்கிப் போடப்பட்டனர். இதைப் பிரதமர் பண்டாரநாயக்கா பாராளுமன்ற கட்டடத்தின் மேல் மாடியிலிருந்து யன்னல் கண்ணாடி வழியாக பார்த்துக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இதைத் தொடர்ந்து கொழும்பிலும், கிழக்கு மாகாணத்தில் கல்லோயா பள்ளத்தாக்கில் வசித்த தமிழ் மக்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதல்களில் 150 தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

இந்த விடயம் இன மோதல் என்ற அளவுக்கு பெரிதுபடுத்தப் பட்டதற்கு பிரதமர் பண்டாரநாயக்காவே காரணம் என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான பீட்டர் கெனமன் குற்றம் சாட்டியிருந்தார். தமிழரசுக் கட்சியினர் எஸ்.கே.வி. செல்வநாயகம் தலைமையில் பாராளுமன்றத்துக்கு முன்பாக உண்ணாநோன்பு இருக்கப்போவதாக அவர் ஆற்றிய உரையும், அதை இலங்கை வானொலி அரைமணிக்கு ஒரு தடவை திரும்பத் திரும்ப ஒலிபரப்புச் செய்ததும்— சிங்கள மக்கள் செல்வநாயகம் ஒரு பெரிய படையுடன் பாராளுமன்றத்தை கைப்பற்ற வருவதாக நினைக்கத்தூண்டிவிட்டது. எனவே அவர்களும் ஒரு பெரும் படையுடன் திரண்டுவந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

– நக்கீரன்

படிப்பகம்